# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2015/2016 (டிசம்பர் 2019)

## TLS 3243 தெரிவு செய்யப்பட்ட பாடநூல்கள் - II

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி – I

1. (அ) ஒப்பியல் ஆராய்ச்சியின் விஞ்ஞானப் பண்புகளைக் குறிப்பிடுக.
(06 புள்ளிகள்)

   (ஆ) இவ்வாய்வு அணுகுமுறை மூலம் க.கைலாசபதி ஆராய்ந்துள்ள பொருண்மைகளையும் கண்டறிந்த முடிவுகளையும் தொகுத்துக் கூறுக.
(14 புள்ளிகள்)

2. (அ) "மூன்றாம் உலகம்" என்ற தொடர் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
(05 புள்ளிகள் )

   (ஆ) "மண்ணும் சொல்லும்" என்ற கவிதைத் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு, ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு மூன்றாம் உலகக் கவிஞர்களால் வெளிப்படுத்தப் பட்டிருக்குமாற்றை உதாரணங்களுடன் விளக்குக. (15 புள்ளிகள்)

3. (அ) உற்பத்தி உறவுகளுக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டுக.
(05 புள்ளிகள் )

   (ஆ) தமிழ் இலக்கண அமைப்பில் திணை, பால், எண் ஆகியன மக்களிடையே நிலவிய உறவுகளை எவ்வாறு புலப்படுத்துகின்றன என்பதை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
(15 புள்ளிகள் )

## பகுதி – II

4. "பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளையின் கவிதைகள் சமூக சீர்திருத்த நோக்கையே அடிப்படையாகக் கொண்டுள்ளன" ஆராய்க. (20 புள்ளிகள் )

5. பௌத்த மதத்தின் தோற்றம், அம்மதம் தமிழ் நாட்டிற்கு வந்து மறைந்த வரலாறு ஆகியன பற்றி மயிலை. சீனி. வேங்கடசாமி முன்வைக்கும் கருத்துக்களை எடுத்துக்காட்டுக.
(20 புள்ளிகள் )

6. " 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' என்ற கவிதைத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு 1960 தொடக்கம் 1980 வரையான ஈழத்து நவீன கவிதையின் பண்புகளை விளங்கிக் கொள்ளலாம்" ஆராய்க.
(20 புள்ளிகள் )

7. "இலக்கியத்தின் உள்ளடக்கமே உருவத்தை நிர்ணயிக்கிறது என்பதற்குப் பாரதியின் பரிணாமம் சிறந்த உதாரணமாகும்" க.கைலாசபதியின் "சிந்துக்குத் தந்தை" என்னும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை விளக்குக.
(20 புள்ளிகள் )